Volume: 06 Issue: 01 January to March 2024 www.irjtsjournal.org

# தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவு ஒரு வரலாற்றுப் பார்வை (முசலிப் பிரதேச செயலக எல்லையை மையப்படுத்திய ஆய்வு)

[1]ஜே. இனாமுல் ஹஸன்[2]ஏ.எல்.எம். முஜாஹித்[3]எம்.எல். முஹம்மட் ஹெல்பான்,
[4]எம்.எஸ்.ஜே. மும்தாஜ் சமீம்,

*பரிசோதகர் (பரீட்சை),தேசியப்பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சிஅதிகார சபை, இலங்கை*

*சிரேஷ்டவிரிவுரையாளர்,இஸ்லாமியக் கற்கைகள் துறை,கலைகலாசாரபீடம், கிழக்குப் பல்லைக்கழகம், இலங்கை*

*விரிவுரையாளர்,இஸ்லாமியக் கற்கைகள் துறை,கலைகலாசாரபீடம், கிழக்குப் பல்லைக்கழகம், இலங்கை*

*பிரதிப் பதிவாளர்,பொதுவிவகாரப் பிரிவு,கிழக்குப் பல்லைக்கழகம், இலங்கை*

***ஆய்வுச் சுருக்கம்***

*பன்மைத்துவ இலங்கையில் மூன்றுதசாப்தகாலமாக இடம் பெற்று வந்த உள்நாட்டுயுத்தத்திற்குப் 'பின்னரான சூழ்நிலையில் இன நல்லுறவு என்ற எண்ணக்கரு ஆய்வாளர்களின் கவனத்தைஈர்த்தஒருபிரதானவிடயமாகும். இந்தவகையில் மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேசசெயலகப் பிரிவில் முஸ்லிம்கள்முறையாகமீள்குடியேற்றப்பட்டகாலப் பகுதிகளிலும் (2009 -2015)மற்றும் மீள் குடியேற்றத்திற்குப் பின்னரானகாலப் பகுதியிலிருந்து இன்றுவரையும் (2015-2023)தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் எவ்வாறுஇன உறவுகாணப்பட்டதுஎன்பதைக் கண்டறிதல் இவ் ஆய்வின் நோக்கமாகும். பண்புசார் அடிப்படையில் அமைந்தஇவ்வாய்வுநேர்காணல் மூலம் பெறப்பட்டமுதலாம் நிலைத் தரவுகளை,குறியீட்டு(coding) முறைமையூடாகபகுப்பாய்வுக்குற்படுத்தியுள்ளது.முசலிப் பிரதேசசெயலகப் பிரிவில் முஸ்லிம்களின் முறையானமீள்குடியேற்றக்காலப் பகுதியில் தமிழ் – முஸ்லிம் ஆகிய இரு சமூகங்களிடையேஅரசியல்,பொருளாதார,சமூக,சமய,கலாசாரமற்றும் கல்விபோன்றசகலதுறைகளிலும் நல்லுறவுகுறைவடைந்துகாணப்பட்டதோடு,மீள்குடியேற்றப்பட்டதிலிருந்து இன்றுவரைமேற்படிஉறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இவ்வாய்வின் மூலம்கண்டறியப்பட்டுள்ளது.மீள் குடியேற்றக்காலப்பகுதியில்உறவுகுறைவடைந்தமைக்கு முஸ்லிம்களின் பலவந்தவெளியேற்றம்,அறிமுகமற்ற இரு இனங்களின் புதியதலைமுறையினர்,இடப்பெயர்வின் கசப்பானநினைவுகள்,இனத்துவப்பாடசாலைகளின் பரவலாக்கம்,நவீனதொடர்புசாதனங்கள் போன்றபலஅம்சங்கள் இதில் செல்வாக்குச்செலுத்தியுள்ளன. இருந்தபோதிலும் குடியேற்றத்திற்குப் பின்னர் இவ்வுறவில் முன்னேற்றம் இடம்பெறுவதற்குஅரசசார்பற்றநிறுவனங்களின் உதவிகள்,இரு சமூகங்களும் பரஸ்பரம் தம்மைப்புரிந்துகொண்டமை,கல்விமான்களின் பணிகள் மற்றும் மதத்தளங்களின் நற்போதனைகள் என்பனகாரணிகளாகஅமைந்துள்ளன. இவ்வாய்வினூடாக முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப் பகுதியில் இரு சமூகங்களுக்கிடையேகாணப்படுகின்றஉறவுநிலைக்கும்*

*மீள்குடியேற்றத்திற்குப்பின்னர்காணப்பட்டஉறவுநிலைக்குமிடையேஉள்ளவித்தியாசங்களைக் கண்டறியமுடிவதுடன் எதிர்காலஆய்வாளர்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் பிரயோசனமாகஅமையவல்லது.*

**திறவுச் சொற்கள்**

*தமிழ் - முஸ்லிம் உறவு, முஸ்லிம்களின் வெளியேற்றம்,மீள்குடியேற்றக் காலம்,மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானகாலம்*

**ஆய்வுப் பின்னணி**

இனநல்லுறவுஎன்றஎண்ணக்கருஅண்மைக் காலத்தில் பிரசித்தம்பெற்றசொல்லாகும். குறிப்பாகஇலங்கையின் இனப்பிரச்சினைக்குப்பின்னர்
இனங்களுக்கிடையிலானகடந்தகாலகசப்புணர்வுகளைமறக்கவைத்துபுதியஉறவுகளைக்கட்டியெழுப்பும் நோக்கில் சமூகவியல் சார்ந்ததுறைகளில் இப்பதம் அதிகம்பிரயோகிக்கப்பட்டுவருகின்றது. குறிப்பாகபாடசாலைதொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை இதன்செல்வாக்கைக்காணலாம்.
இனநல்லுறவுஎன்றசொல்லிற்குகுறிப்பிட்டவரைவிலக்கணம் கிடையாது.மாறாக இதுசமூகநல்விணக்கம்,சமாதானம்,சகவாழ்வுபோன்றபதங்களுடன் இணைத்துப் பேசப்படுகின்றது.Dr.Martin Luther kingநல்லுறவுபற்றிக் குறிப்பிடும் போது"ஒவ்வொருமனிதனும் ஒருவரையொருவர் சமனாப் பார்க்கவேண்டும். ஒருவரினதுதேவைகளைத் தனதுதேவையாகக் கருத்திற்கொண்டுசெயற்படவேண்டும். இவ்வாறானசமுதாயமேசகவாழ்வானசமத்துவமானசமுதாயமாகும்." (Kumar Rupasing and Gayathir Fernando 2007, p. 276)
சமயரீதியாக இஸ்லாத்தில் இன உறவு,சகவாழ்வுதொடர்பாகஅல்குர்ஆனிலும், அல் ஹதீஸிலும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. "ஒருசமூகத்தின் மீதுள்ளவெறுப்பானதுஅவர்களுடன் நீங்கள் நீதியாகநடந்துகொள்வதற்குதடையாகஅமைந்துவிடக்கூடாது. நீங்கள் நீதமாகநடந்துகொள்ளுங்கள் அதுதக்வாவிற்குமிகநெருக்கமானநிலையாகும்"(சூறா அல்மாயிதா: 08) மேலும் "மனிதர்களேஉங்கள் ரப்பைநீங்கள் அஞ்சிக்கொள்ளுங்கள். அவன் எத்தகையவன் என்றால் உங்களைஒரேஆத்மாவிலிருந்துபடைத்தான்."(சூறா அன்னிஸா: 01)

"மனிதர்களேஉங்கள் அனைவரையும் நிச்சயமாகநாம் ஒரேஆண்,ஒரேபெண்லிருந்துதான் படைத்தோம். பின்னர்,ஒருவர் மற்றவரைஅறிந்துகொள்ளும் பொருட்டுஉங்களைகிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால்,உங்களில் ஒருவர் மற்றவரைவிடமேலென்றுபெருமைபாராட்டிக் கொள்வதற்கில்லை.) எனினும் உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ,அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாகமிககண்ணியமானவர். நிச்சயமாகஅல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்குஉணர்பவனாகவும் இருக்கின்றான். (சூறாஅல்ஹுஜுறாத்: 13)

அல் ஹதீஸ் இனநல்லுறவுதொடர்பாக இவ்வாறு கூறுகின்றது. "எவர் முஸ்லிமுடன் உடன்படிக்கைசெய்துகொண்டிருக்கும் முஸ்லிமல்லாதநபருக்குஅநீதி இழைக்கின்றாரோஅல்லதுஅவரின் உரிமையைக் குறைக்கின்றாரோஅல்லதுஅவரின் மனவிருப்பமின்றிஅவரிடமிருந்துஏதேனும் ஒன்றைப் பெறுகிறாரோஅவருக்குஎதிராகமறுமையில் நான் வாதிடுபவனாக இருப்பேன்"(அபூதாவூத்)

மேலும் அண்டைவீட்டார் பசியால் வாடிப்போயிருக்க,தாம் மட்டும் வயிறாரஉண்பவர் உண்மையான முஸ்லிம் அல்லர். (நபிமொழி, ஹாகிம் - 7307)இவ்வாறுஅல்குர்ஆன் மற்றும் அல் ஹதீஸ் என்பனஇன நல்லுறவின் அவசியத்தைவெளிப்படுத்தியுள்ளன.

இனநல்லுறவானது ஒரு சமூகத்தில் சகலதுறைகளிலும் இடம்பெறவேண்டும். (பழீல், 2008). இந்தவகையில் இனப் பிரச்சினைக்குமுற்பட்டக் காலப் பகுதியில் குறிப்பாக முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்குமுன்னர் வட,கிழக்குமாகாணங்களில் மாத்திரமல்லாமல் இலங்கையின் சகலபிரதேசங்களிலும் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையிலானஉறவுசிறப்பாகக் காணப்பட்டதுடன் இவ்வாய்வுப் பிரதேசமானமுசலியும் இதில் விதிவிலக்கானதல்ல.

முசலிஎன்பதுமன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளபிரதேசசெயலகங்களில் ஒன்றாகும். இங்குமுஸ்லிம்கள்(82%)[1]பெரும்பான்மையினராவும்தமிழர்களும் (16%)[2]சிங்களவர்களும்(02%)[3]சிறுபான்மை இனக் குழுக்களாகவும்வாழ்ந்துவருகின்றனர். இப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்குமுன்னர் இருசமூகங்களுக்குமிடையிலானஉறவுஎன்பது இன்றும் போற்றத்தகவகையில் அமைந்திருந்ததைமுன்னையஆய்வுகளிலிருந்துஅறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. (ஹஸன், 2015)

பொதுவாகஆய்வுப் பிரதேசத்தில்தமிழ் முஸ்லிம்களுக்கிடையிலானஉறவுஅரசியல்,பொருளாதார,சமூக,சமயம் சார்ந்தசகலதுறைகளிலும் வியாபித்திருந்தது. தங்களுக்கிடையில் இருந்தநல்லுறவின் காரணமாககாக்கா,மச்சான்,மாமா,மாமி,அக்கா,உம்மாபோன்ற இரத்தஉறவுமுறைகளைக் கொண்டுஒருவருக்கொருவர் அழைத்துக் கொண்டனர். "சமயங்கள் தான் மாற்றமாக இருந்ததுதவிரநாங்கள் ஒரேதாய்ப்பிள்ளைகளைப் போல் வாழ்ந்தோம்"(பக்கீர் முஹம்மதுஅலிமுஹம்மது, 2015)

இவ்வாறுமுசலிப் பிரதேசத்தில் தமிழ் -முஸ்லிம் இனங்களுக்கிடையிலானஉறவானதுசிறப்பாகக் காணப்பட்டபோதிலும் வடமாகாண முஸ்லிம்களின் பலவந்தவெளியேற்றம் இந்நல்லுறவில் பாரியவிரிசல்களைஏற்படுத்தியது.முசலிபிரதேசசெயலகப் பிரிவிலிருந்தமுஸ்லிம்களும்தமிழீழவிடுதலைப் புலிகளினால் பலவந்தமாக 1990ம் ஆண்டுவெளியேற்றப்பட்டனர். (மஸ்தான், 2015).

மேற்கூறியவாறுமனக் கசப்புடன் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அரசாங்கத்தினால் முறையாகமீள்குடியேற்றப்பட்டகாலப்பகுதியில் (2009 -2015) தமிழ் - முஸ்லிம்உறவில் பாரியஇடைவெளிகாணப்பட்டது. இருந்தபோதிலும் மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் இவ்வுறவில் சகலதுறைகளிலுமகுறிப்பிடத்தக்களவுமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைஅவதானிக்கமுடிகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

1990ம் ஆண்டுஆய்வுப் பிரதேசத்திலிருந்துபலவந்தமாக முஸ்லிம்களைவெளியேற்றியமைஇக்காலத்திற்குமுன்னர் தமிழ் - முஸ்லிம் என இரண்டரக் கலந்துவாழ்ந்தநிலையைமறக்கச் செய்து, இரு சமூகங்களுக்கும்மத்தியில் பிளவுகள் தோன்றவழியேற்பட்டன. இதனால்மீள்குடியேற்றக் காலப் பகுதியில் ஒவ்வொருசமூகமும் பரஸ்பரம் ஏனையவர்களைஎதிரியாகப்பார்க்கும் நிலையைத் தோற்றுவித்தது. இவ்வாறானசெயற்பாடுகளால்இவ்விருசமூகங்களுக்கிடையிலும் சகலதுறைகளிலும் பின்னடைவுகள்ஏற்படுவதற்கும் இன ஒற்றுமைசீர்குலைவதற்கும் வழிகோலியது.

**ஆய்வின் நோக்கம்**

[1] முஸலி பிரதேச செயலகம்,இனரீதியான சனத்தொகைக் கணக்கெடுப்பு,2023 டிசம்பர்
[2] மேலது
[3] மேலது

முசலிப் பிரதேசசெயலகத்திற்குட்பட்டபகுதியில் முஸ்லிம்களின் முறையானமீள்குடியேற்றக் காலப் பகுதியிலும் (2009 -2015) மீள் குடியேற்றத்திற்குப் பின்னரானகாலப் பகுதிக்குள்ளும் (2015-2023) தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் காணப்பட்டநல்லுறவுமற்றும் இணைந்தசெயற்பாடுஎவ்வாறுகாணப்பட்டனஎன்பதைக் கண்டறிவதைஇவ்வாய்வுபிரதானநோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வுமுறையியல்**

பண்புரீதியானஆய்வாக இது அமையப்பெற்றுள்ளது.ஆய்வுப் பிரதேசத்தின் எல்லைக்குள்காணப்படும் 20 கிராமங்களில்,அருகருகேஅமைந்துள்ளதமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்கள் எனஅடையாளம் காணப்பட்ட 13[4]கிராமங்களிலிருந்து 26 நபர்கள் அவர்களின் அனுபவம்,வயது,ஆண் –பெண் வேறுபாடு,தொழில் ரீதியிலானபங்குபற்றல் போன்றதகுதிகளுக்கேற்பஎழுமாறாகதெரிவுசெய்யப்பட்டுஅவர்களிடம் கட்டமைக்கப்பட்டவினாக்களின் துணையுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுதகவல்கள் பெறப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்றதரவுகள் குறிமுறை (Coding)அடிப்படையில் பகுப்பாய்வுசெய்யப்பட்டுள்ளன.இவ்வாய்வின் கோட்பாட்டுஅமைப்புத் திட்டத்தினைஉருவாக்குவதற்காகதமிழ் - முஸ்லிம் உறவுதொடர்பாகஎழுதப்பட்ட நூல்கள்,சஞ்சிகைகள்,ஆய்வுக்கட்டுரைகள் என்பனபரிசீலிக்கப்பட்டன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

**மீள் குடியேற்றக் காலப்பகுதியில் இன நல்லுறவு (2009 - 2015)**

முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்குமுன்னர் முசலிப் பிரதேசசெயலகப் பகுதிற்குள்தமிழர்களும் முஸ்லிம்களும்சிறப்பானஉறவினைப் பேணிவந்தபோதிலும் மீள் குடியேற்றக் காலப் பகுதியில் (2009 - 2015) இவ்விரண்டுசமூகங்களுக்கிடையிலானஉறவில் பாரிய இடைவெளிகாணப்பட்டதைநேர்காணளிலிருந்துஅறியமுடிகின்றது.இவ்வாறுதமிழ் - முஸ்லிம்களிடையேகாணப்பட்டஉறவு,இணைந்தசெயற்பாடுகுறைந்திருந்தமைக்குபிரதானகாரணமாகமுன்வைக்கப்படுவது இடப்பெயர்வாகும்.

1990ஆம் ஆண்டுதமிழீழவிடுதலைப் புலிகளினால் முஸ்லிம்கள் பலவந்தமாகஇப்பிராந்தியத்திலிருந்துவெளியேற்றப்பட்டதோடு, முஸ்லிம்கள்வெளியேறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள்சிலரினால் முஸ்லிம்களின் பொருட்கள் சூறையாடப்பட்டன.அவ்வாறுஅபகரிக்கப்பட்டபொருட்களைதமிழ் மக்கள் தமதுதேவைகளுக்காகபயன்படுத்தியதை முஸ்லிம்கள் மீள் குடியேற்றப்பட்டகாலப்பகுதிற்குள்கண்டுகொண்டனர்.இவ்வாறானதுரதி‘ட நிகழ்வுகள் இப்பிராந்தியமுஸ்லிம்களின் மனதில் ஒருவடுவாகபதிந்ததுடன் இது மீள்குடியேற்றக் காலப் பகுதியில்(2009 – 2015) இரு இனங்களுக்கிடையிலானஉறவில் அதிகதாக்கங்களைஏற்படுத்தியது. (எச். ராஜிதா,2015)

மேலும் 25 வருடஅகதிவாழ்கையின் போது முஸ்லிம்கள் தங்களுக்குதமிழீழவிடுதலைப் புலிகளினால்இழைக்கப்பட்டதுன்பங்களைப் பற்றிதமதுசந்ததியினருக்குஞாபகப்படுத்திவந்துள்ளனர்.ஆனால் தமிழ் மக்கள்இங்குவாழ்ந்த முஸ்லிம்கள் பற்றியும் அவர்களின் வெளியேற்றம் பற்றியும் தங்கள் பிள்ளைகளுக்குபெரிதளவில் கூறவில்லை.இதன் காரணமாகபுதியசந்ததியுடன் மீள்குடியேறிய முஸ்லிம்களைதமிழ் சகோதரர்களின் புதியதலைமுறையினர் தங்கள் பிராந்தியங்களில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துவதாகநினைத்தனர். (எச். ராஜிதா, 2015)

[4]தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் முறையே:- வேப்பங்குளம், மருதமடு, பொற்கேணி, கார்மேல் நகர், முசலி, சவேரியார்புரம், சிலாவத்துறை, கொக்குப்படையான், கொண்டச்சி, மறிச்சிக்கட்டி, முள்ளிக் குளம், பண்டாரவெளி, முத்தரிப்புத் துறை

இரு இனங்களுக்கிடையிலானஅரசியல் ரீதியானநல்லுறவினைப் பொறுத்தவரையில் இக்காலகட்டத்தில் மிகவும்குறைவாகவேகாணப்பட்டுள்ளது. இடப்பெயர்விற்குமுன்னர் அரசியலில் ஒன்டறக் கலந்திருந்த இவ்விருசமூகங்களும் மீள்குடியேற்றக் காலப் பகுதியில் தனித்துச் செயற்படஆரம்பித்தனர். தமிழர்களும்முஸ்லிம்களும் தங்களுக்கிடையில் வாக்குகளைபரிமாறிக் கொள்வதுமிகவும் அரிதாகவேகாணப்பட்டது. இவ்விருசமூகங்களும் சிறுபான்மையினர் என்றவகையில் தங்கள் உரிமைகளைஒன்றாக இணைந்துவென்றெடுக்கக் கூடியசூல்நிலை காணப்பட்டபோதிலும் அரசியல்வாதிகள் தங்கள் இனத்திற்கானஉரிமைகளைபெற்றுக் கொள்வதில்தனித்தேசெயற்பட்டனர். *(பாயிஸ்,2015)*

முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் சமூகத்திடம் வாக்குக் கேட்டுச் சென்றபோதிலும் தமிழ் அரசயல்வாதிகள்முசலிப்பிரதேசசெயலகப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களிடம் வாக்குக் கேட்டுவரவில்லை. மேலும் வில்பத்துப் பிரச்சினைஎழுந்தகாலகட்டத்தில் அதுதமிழ்,முஸ்லிம் ஆகிய இரு இனங்களின் பூர்வீகத்தினைபாதித்தபோதிலும் இதுதொடர்பாகபாராளுமன்றத்திலும்,பொதுசனஊடகங்களிலும் அதிகம் விவாதித்தவர்கள் முஸ்லிம்களாகவேகாணப்பட்டனர். ஆனால் இவ்விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்குதோள் கொடுக்கவில்லைஎன்பதே முஸ்லிம்களின் குற்றச்சாட்டாக இருந்தது. *(அலியார் எம்.எஸ்.எம், 2015)*

அரசவளங்களைப் பங்கீடுசெய்வதில் காணப்பட்ட இனப் பாகுபாடுஅரசியல் ரீதியானநல்லுறவில் மேலும்பாதிப்புக்களைஏற்படுத்தியது.அதாவதுஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகக்காணப்படுவதால் அப்பிரதேசசபையினூடாகக் கிடைக்கப் பெருகின்றஉதவிகள் ஏதும் தங்களுக்குகிடைக்கப்பெறுவதில்லைஎனத் தமிழர்களும் வடமாகாணசபையினூடகக் கிடைக்கப் பெறுகின்றஉதவிகள்,உயர் பதவிகளில்ஓரங்கட்டப்படுவதாக முஸ்லிம்களும் கருதினர். *(ரயிசுதீன்- தேவபாலன், 2015)*எனவேஅரசியல் ரீதியானதமிழ் முஸ்லிம் நல்லுறவுஎன்பதுமீள் குடியேற்றக் காலப் பகுதியில்*(2009 -2015)* மிகவும் குறைவாகவேகாணப்பட்டதுஎன்பதுநேர்காணல் மூலம் அறியக் கூடியதாகஉள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் பொருளாதாரரீதியாகதமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலானநல்லுறவுஎன்பதுகுறைவடைந்துகாணப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் இடப்பெயர்விற்குமுன்னர் தமிழர்கள் அதிகம் மீன்பிடியினைபிரதானதொழிலாகக் கொண்டிருந்தனர்.இதனால் தங்களதுவிவசாயநிலங்களைகுத்தகைக்கும் ஒத்திக்கும்கொடுத்துவந்தனர். ஆனால் மீள்குடியேற்றக் காலப்பகுதியில் தமிழர்களும் விவசாயநடவடிக்கையில் ஈடுபடஆரம்பித்தனர்.இதனால் நிலங்களை முஸ்லிம்களுக்குகுத்தகைக்குகொடுப்பதைகுறைத்துவந்தனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்துவிவசாயம் செய்தல் மற்றும்விவசாயம் சார்ந்தநடவடிக்கைகளில் ஈடுபடுவதுபோன்றசெயற்பாடுகள் குறைவடைந்தமைக்குமுன்வைக்கப்படும் பிரிதொருகாரணிநவீனமயமாக்கமாகும். இதன்விளைவாகவிவசாயவேலைகளைசெய்வதற்குமனிதவலுவிற்குபதிலாகஅதிகமாகஉழவு இயந்திரங்கள்பயன்படுத்தப்பட்டன. இதனால்விவசாயத்தில் தமிழர்களின் உதவி முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்களின் உதவிதமிழர்களுக்கும் மிகக் குறைவாகவேதேவைப்பட்டது. இவ்வாறானகாரணங்கள் தமிழ் முஸ்லிம்களுக்கிடையிலானபொருளாதாரஉறவில் விரிசலைஏற்படுத்ததுணையாகஅமைந்தன. *(தேவபாலன்,2015)*

சமய,கலாசாரரீதியிலானஉறவைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் இடப்பெயர்விற்குமுன்னர்யார் தமிழர் யார் முஸ்லிம் எனஅடயாளம் கண்டுகொள்ளமுடியாதளவிற்கு இரு சமூகங்களும் கலாசாரரீதியாகஒன்டறக் கலந்திருந்தனர். ஆனால் இந்நிலை முஸ்லிம்கள் மீள்குடியேறியகாலப் பகுதியில்மாற்றத்திற்குட்பட்டது.*(இதயராஜா குருஸ்,2015)*

முன்னையகாலங்களில் சமய,கலாசாரநிகழ்வுகளில் பங்குபற்றியதுபோன்றுதமிழர்கள் முஸ்லிம்களின் விழாக்களிலும் முஸ்லிம்கள் தமிழர்களின்விழாக்களிலும் தற்போதுபங்குபற்றுவதில்லைஎன இரு சமூகத்தினரும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

ஏற்றுக்கொண்டனர். குறிப்பாகஆய்வுப்பிரதேத்தில் மீள்குடியேற்றகாலப்பகுதியில் முஸ்லிம்கள் கந்தூரி போன்றவிழாக்களைநடத்தாமையினால் தமிழர்கள் முஸ்லிம்களின்சமயம் சார்ந்தநிகழ்வுகளில் பங்குபெறவேண்டியஅவசியம்ஏற்படவில்லை. முஸ்லிம் பெண்கள் சாரிஅணிகின்றபண்பாடுமாறிஈரானியஅபாயாஅணிகின்றநிலைஉருவாகியதைமுஸ்லிம்கள் இடம்பெயர்ந்துஅகதிகளாகதங்கியிருந்தபுத்தளத்தில்புதுவகையானகலாசாரத்தினைபின்பற்றுவதாகதமிழர்கள்நினைத்தனர். (தேவபாலன், 2015)

எனவேமீள்குடியேற்றக் காலப்பகுதியில் தமிழ் முஸ்லிம்களுக்கிடையிலானசமய,கலாசாரரீதியிலானஉறவுகுறைவடைந்துகாணப்பட்டமைக்கு முஸ்லிம் பெண்கள் பர்தாஅணிதலும்,ஆண்கள் தாடிவளர்த்தலும்,நவீனதமிழ் பெண்களின் உடையமைப்பும் இரு இனங்களையும் மாறிமாறிவித்தியாசமானகண்ணோட்டத்தில் பாக்கவைத்தது.(டெனி,2015) இவ்வாறானகாரணங்கள் தமிழ் - முஸ்லிம் இரு சமூகங்களுக்கிடையிலானசமய,கலாசாரரீதியிலானநல்லுறவில் இடைவெளியைஏற்படுத்திச் சென்றது.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப்பகுதியில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலானகல்விரீதியானஉறவினைப் பார்க்கின்றபோதுமிகவும் குறைந்தநிலையிலேயேகாணப்பட்டுள்ளது. குறிப்பாகஇனத்துவப் பாடசாலைகளின் உருவாக்கம் இவ்விடயத்தில் பாரியபங்களிப்பைசெய்துவந்தன.அரிப்புஎனும் தமிழ் பாடசாலையில் கல்விகற்ற முஸ்லிம் மாணவிசிலகாலங்களில் தமிழர்களின் கலாசாரத் தாக்கத்திற்குட்பட்டுபாடசாலைநேரங்களில் தனது ஹிஜாபைஅகற்றிவிட்டுவிளையாடியதைக் கண்டஅம்மாணவியின் தந்தைஅப்பாடசாலையைவிட்டுநீக்கிவிட்டு தூரத்தில் இருக்கும் வேறு முஸ்லிம் பாடசாலைக்குஅனுப்பினார்.இவ்வாறானசம்பவங்களும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப்பகுதியில் இடம்பெற்றது. (இதயராஜ குறிஸ், 2015)மேற்கூறியபிரதானகாரணங்கள் தமிழ்,முஸ்லிம்மாணவர்கள் பாடசாலையில் ஒன்றாக இணைந்துகல்விகற்பதில் பாரிய இடைவெளியைஏற்படுத்தின.

ஆய்வுப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப்பகுதியில் தமிழ், முஸ்லிம்இனங்களுக்கிடையில் திருமணரீதியானநல்லுறவினைப் பொருத்தவரையில் பாரிய இடைவெளிகாணப்பட்டுள்ளதைஇரு இனங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டநேர்காணலின் போதுகண்டறியப்பட்டுள்ளது. அதாவது2015ம் ஆண்டுகொக்குப் படையான்,அரிப்புஆகியதழிழ் கிராமங்களில்நடைபெற்றகலப்புத் திருமணம் (முஸ்லிம் - தமிழ்) பலபிரச்சினைகளைசம்பந்தப்பட்ட முஸ்லிம்,தமிழ் குடும்பங்கள் இடையில்ஏற்படுத்தியதுடன்,முஸ்லிம்களைப் பற்றிதப்பானஅபிப்பிராயத்திற்குதமிழ் மக்களைக் கொண்டுசென்றது. (ரொபட், 2015)ஒன்றாகவேலைசெய்தல்,நவீனதொடர்புசாதனங்கள்,கல்வி கூடங்களில் ஒன்றாக இணைந்துகல்விகற்றல் போன்றகாரணங்களினால் இப்பிராந்தியத்தில் நட்புகாதலாகிஅதுமுறையற்றகலப்புத் திருமணத்திற்குவழிகோலியதாகநேர்காணல் மூலம் அறியமுடிந்தது.மேற்கூறியவாறு இரு இனங்களுக்கிடையில் இடம்பெற்றகலப்புத் திருமணங்கள் இரு சமூகங்களுக்கிடையில்பிளவைஏற்படுத்தியதுஎனலாம். (டெனி, 2015)

மேற்கூறியவாறு முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப் பரப்புக்குள் (2009-2015) தமிழ் - முஸ்லிம்களின் நல்லுறவில் விரிசல்களைஏற்படுத்திச் சென்றபிரதானகாரணிகளாக முஸ்லிம்களின் பலவந்தவெளியேற்றம், இடப்பெயர்வின் கசப்புணர்வு, முஸ்லிம்கள் பற்றியஅறிமுகமற்றதமிழ் சகோதரர்களின் புதியதலைமுறை, இரு இனங்களினதும் புதியசந்ததிகள் போன்றவைகள் செல்வாக்குச் செலுத்தியதுடன் இக்காரணங்கள் இரு இனத்தவர்களின் அரசியல்,பொருளாதார,சமூக,சமயம் சார்ந்தசகலதுறைகளிலும் செல்வாக்குச் செலுத்திச் சென்றதைநேர்காணல் மூலம் கிடைக்கப்பெற்றதகவல்கள் சான்றாகஅமைந்துள்ளன.

***மீள் குடியேற்றத்திற்குப் பின்னரானகாலப் பகுதியில் இன நல்லுறவு (2015 – 2023)***

*2015ம் ஆண்டுமீள்குடியேற்றத்திற்குபின்னர் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலானஉறவு, இணைந்தசெயற்பாடானதுமீள்குடியேற்றம் நடைபெற்றகாலப் பகுதியினைவிடஓரளவுநெருக்கமானநிலையில் இருப்பதைஅவதானிக்கக் கூடியதாகஉள்ளது. இந்நெருங்கியஉறவானதுகணிசமாகசகலதுறைகளிலும் பரிணமித்துவருகின்றமைகுறிப்பிடத்தக்கஅம்சமாகும்.*

*பொதுவாகஆய்வுப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலானஉறவில் பிரதானபாலமாகஅமைவதுதாய்மொழிதமிழ் மற்றும் அயல் கிராமவாழ்க்கைமுறைமைபோன்றனவாகும். அதாவது, இரண்டு இனங்களின் தாய் மொழியாகதமிழ் காணப்படுவதுடன் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அருகருகேஅமைந்துள்ளமைஒருசமூகம் மற்றசமூகத்திடமிருந்துபிரிந்துஅல்லதுஒதுங்கிவாழமுடியாதநிலையினைஉருவாக்கியுள்ளது.மேலும் மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் இவ்வுறவில் முன்னேற்றம் ஏற்படுவதற்குஅரசசார்பற்றநிறுவனங்களின் உதவிகள், இரு சமூகங்களும் தம்மைபுரிந்துகொண்டமை,கல்விமான்களின் பணிகள் மற்றும் மதத்தளங்களின் நற்போதனைகள் என்பனகாரணிகளாகஅமைந்துள்ளன.இதனால் அரசியல்,கல்வி,பொருளாதார,சமய,கலாசாரதுறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. (ராஜிதா,2023)*

*அரசியல் ரீதியிலானநல்லுறவினைப் பொறுத்த வரையில் சிலமுரண்பாடுகள் காணப்பட்டாலும் அண்மைக் காலங்களில் இடம்பெற்றதேர்தல்களைஅவதானிக்கும் போதுதமிழ் மக்களில் கணிசமானோர் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குவாக்களித்திருந்தனர். குறிப்பாகபாராளுமன்ற,பிரதேசசபைத் தேர்தல்களில் இவ்வாக்குகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாகவன்னிமாவட்டத்தில் பெரும்பான்மையினராகதமிழ் மக்கள் காணப்பட்டபோதிலும் அதிகமானவாக்குகளை முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினரும்,மன்னார் மாவட்டத்தில் பெரும்பான்மைப் பிரதேசசபைகளை முஸ்லிம் கட்சியானஅகில இலங்கைமக்கள் காங்கிரசும் பெற்றுக் கொண்டது. (ரயிசுதீன், 2015)*

*அண்மைக் காலங்களில் இடம்பெற்றதேர்தல்களில் முஸ்லிம் கட்சிகளில் தமிழ் உறுப்பினர்களும்,தமிழ் கட்சிகளில் முஸ்லிம் உறுப்பினர்களும் வேட்பாளர்களாகபோட்டியிட்டிருந்தனர். முஸ்லிம் காங்கிரஸ்,அகில இலங்கைமக்கள் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் தலைமைகளைக் கொண்டிருக்கும் கட்சிகளில் பாராளுமன்ற,பிரதேசசபைத் தேர்தல்களில் அதிகமானதமிழ் உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். உதாரணமாக,வங்காலைஎனும் தமிழ் கிராமத்தைச் சேர்ந்ததயான் என்பவர் முஸ்லிம்களைஅதிகம் கொண்டிருந்தவாக்குச்சாவடியில் 1000த்திற்கும் மேற்பட்டவாக்குகளைபெற்றிருந்தார். இவ்வாறே முஸ்லிம் உறுப்பினர்களும் தமிழ் கட்சியில் கேட்டுஅதிகமானவாக்குகளைப் பெற்றிருந்தனர். (ஹஸன், 2015)*

*இவ்வாறு இரண்டுசமூகங்களும் ஒன்றிணைந்துவாக்குகளைக் கேட்டமைதமிழ், முஸ்லிம் நல்லுறவிற்கானஅடிப்படையாகஅமைந்தது. எனினும்,அரசியல் ரீதியாகவழங்கப்படுகின்றவளப் பங்கீட்டில் முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினர்களால் தமிழ் மக்களும்,வடமாகாணசபையினால் முஸ்லிம்களும் புறக்கணிக்கப்படுவதாக இரண்டு இனங்களிடையேகுற்றச்சாட்டுக்கள் தற்போதும் காணப்படுகின்றன. இது அரசியல் ரீதியானநல்லுறவில் பாதிப்புக்களைசற்றுஏற்படுத்தவல்லது.*

*பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலானநல்லுறவு, இணைந்தசெயற்பாடுஎன்பனமிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தின் பொருளாதாரமுதுகெழும்புவிவாசயம்,மீன்பிடிஎன்றவகையில் இத்துறைகளில் ஒரு இனம் மற்ற இனத்துடன் ஒன்றிணைந்துவாழ்ந்துவருகின்றன.*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

விவசாயத்தைப் பொருத்தவரையில் வேளாண்மைசெய்கைக்காகதமிழ் மக்கள் முஸ்லிம்களிடமும், முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களிடமும் காணிகளைகுத்தகை,ஒத்திபோன்றஅடிப்படையில் பெற்றுவிவசாயம் செய்துவருகின்றனர். மேலும்,இப்பிரதேசத்தைப் பொருத்தவரையில் தமிழ் மக்களுக்குவிவசாயக் காணிகள் குறைவாகக் காணப்படுவதனால் முஸ்லிம் சகோதரர்களின் விவசாயநிலங்களுக்குகளைபிடுங்குதல், பசளை இடுதல்,கிருமிநாசினிதெளித்தல்போன்றவேலைகளில் தமிழ் மக்கள் முஸ்லிம்களுடன் இணைந்துசெயற்பட்டுவருகின்றனர். (ரஸீத், 2023)

மீன்பிடியினைப் பொருத்தவரையில் தமிழ் - முஸ்லிம்கள் ஒரேவள்ளத்தில் தொழில் செய்தல்,வள்ளங்களைகரைக்குத் தள்ளுதல்,பிடிபட்டமீன்களைத்தரம்பிரித்தல்போன்றசெயற்பாடுகளில் ஒன்றிணைந்துசெயற்பட்டுவருகின்றனர். அத்துடன்,முசலிப் பிரதேசத்தின் பிரதானநகரானசிலாவத்துறையில் அதிகமானவர்த்தகநிலையங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலேயேஉள்ளன. இங்குதமிழ் மக்கள் பொருட்களைபணத்தினைக் கொடுத்தும் கடனாகவும் பெற்றுக் கொள்கின்றனர்.

சிகைஅலங்காரக் கடைகள் இப்பிரதேசத்தில் தமிழர்களினாலேயேநடாத்தப்படுகின்றன. இங்குசிலைஅலங்காரவேலைகளுக்காக முஸ்லிம்கள் செல்கின்றனர். இவ்வாறுவிவசாய,மீன்பிடி,வர்த்தக,அலங்காரம் போன்றதுறைகளில் இரு சமூகங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்துதங்கி இருப்பதுடன் அதுவேதமிழ், முஸ்லிம்களின் நல்லுறவிற்கானபாலமாகவும்காணப்படுகின்றது.

சமயரீதியாக இரண்டுசமூகங்களும் இணைந்துசெயற்படல் மிகக் குறைவாகும். முஸ்லிம்கள் இப்பிரதேசத்திலிருந்துவெளியேற்றப்படுவதற்குமுன்னர் தமிழ் மக்கள் முஸ்லிம்களின் பள்ளிவாயலில் இடம்பெறும்கந்தூரி நிகழ்வுகளில் கலந்துகொண்டதுபோன்று முஸ்லிம்களும் தமிழர்களின் கோயில்களில் இடம்பெறும் அண்ணதானநிகழ்வுகளில் கலந்துகொண்டனர். ஆனால்,அண்மைக் காலமாக முஸ்லிம்களிடம் ஏற்பட்டசமயரீதியிலானகல்விவளர்ச்சிமற்றும் பொதுவானகல்விஅறிவுவிருத்தியின் காரணமாக முஸ்லிம்கள் அவர்களின் சமயநிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லைஎன்பதுடன் முஸ்லிம்களிடமிருந்துகந்தூரி போன்றபித்அத்தானசெயற்பாடுகள் இப்பிரதேசத்திலிருந்துஒழிந்ததால் தமிழ் மக்களும் முஸ்லிம்களின் சமயநிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லை. ஆனால் இதுதமிழ், முஸ்லிம் உறவில் எவ்விதபாதிப்புக்களையும் ஏற்படுத்தவில்லைஎன்பதுபுலனாகிறது.(இதயராசாகுரிஸ், 2023)

முஸ்லிம்களைபெரும்பான்மையினராகக் கொண்ட இப்பிரதேசத்தில் சிலாவத்துறைநகரின் மத்தியில் தமிழ் மக்களின் சிலைஒன்றுவைக்கப்பட்டுஅதிககாலம் இருந்துவருவதுடன் திருநாட்களிலும் ஒவ்வொருமாலைநேரத்திலும் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இதன் காரணமாக இவ்விருசமூகங்களுக்கிடையிலும் எவ்விதமுரண்பாடுகளும் பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை. அத்துடன் முசலிப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவசமயத்தினைப் பின்பற்றுகின்றனர். இதனால் இஸ்லாம்,கிறிஸ்தவம் ஆகியசமயங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையானவிடயங்கள் இவ்விருசமூகங்களையும் இணைக்கக் கூடியதாகஉள்ளன.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பகாலகட்டத்தில் 2009ம் ஆண்டு முஸ்லிம்கள் அணியும் அபாயா,புர்காபற்றியதவறானகருத்துக்கள் தமிழ் சகோதரர்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால் தற்போதுஅவ்வாறானபிழையானஎண்ணங்கள் விடுபட்டுள்ளதுடன் முஸ்லிம்களின் ஆடைகளைசிறந்தஒழுக்கமானஆடைகளாகதமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

கலாசாரரீதியாக இருசமூகங்களும் விளையாட்டுக்களில் ஒன்றறக் கலந்துசெயற்படுகின்றனர். மேலும் திருமணநிகழ்வுகள்,பெருநாட்கள்,சாமத்தியவீடுகள் போன்றகலாசாரரீதியானநிகழ்வுகளுக்குஒரு இனம் மற்ற இன வீடுகளிற்குசென்றுஉறவாடிவிருந்தோம்பலைஉண்ணக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இவ்வாறுசமய,கலாசாரரீதியாக இரண்டுசமூகங்களுக்கிடையிலும் சிறந்தநல்லுறவு இருந்துவருவதைஅவதானிக்கக் கூடியதாகஉள்ளது. (திரிஸா, 2023)

இரண்டுசமூகங்களை இணைக்கும் பாலமாகபாடசாலைகாணப்படுகின்றது. அண்மைக் காலங்களில் இனத்துவப் பாடசாலைகளின் உருவாக்கம் காரணமாகதமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாக இணைந்துஒரேபாடசாலையில் கல்விகற்பதுகுறைந்துள்ளபோதிலும் அதுபாரியளவிலானவீழ்ச்சிஎன்றுகுறிப்பிடமுடியாது. ஏனெனில், இன்றும் பலபாடசாலைகளில் தமிழ், முஸ்லிம்கள் இணைந்துகல்விகற்றுவருகின்றனர்.

முசலி,சிலாவத்துறை,மறிச்சிக்கட்டி,கொண்டச்சி,வேப்பங்குளம் போன்றகிராமங்களில் காணப்படும் முஸ்லிம் பாடசாலைகளிலும் அரிப்பு,கார்மேல் நகர் ஆகியகிராமங்களில் காணப்படும் தமிழ் பாடசாலைகளிலும் இரண்டு இனப் பிள்ளைகளும் ஒன்றாக இணைந்துகல்விநடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். மேலும் பாடசாலைவிளையாட்டுப் போட்டிகள்,கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாகக் கலந்துகொள்வதுடன் அவர்களின் வீடுகளில் நடைபெறும் சந்தோ‘,துக்கநிகழ்வுகளிலும்பங்குகொள்கின்றனர். இந்தவகையில் கல்விரீதியாக இரண்டுசமூகங்களும் சிறந்தநல்லுறவைப்பேணிவருவதுடன் இவ்வுறவானது ஏனைய துறைகளிலும் ஒன்றிணைவதற்குவழிசமைக்கின்றது. (தேவபாலன், 2023)

கலப்புத் திருமணமானது இப்பிரதேசத்தில் அன்றிலிருந்து இன்றுவரைபொதுவாக இடம்பெற்றுவருகின்றன. மீள்குடியேற்றக் காலப்பகுதியில் இடம்பெற்ற இவ்வாறானதிருமணத்தினால் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையேஏற்பட்டமுரண்பாடுகள் தற்போதுமிகக் குறைவாகும். இக்கலப்புத் திருமணமானதுமுசலிப் பிரதேசத்தில் உள்ளகொண்டச்சி,கொக்குப்படையான்,சிலாவத்துறை,சவேரியார்புரம்,அரிப்பு,வெள்ளிமேலைஆகிய முஸ்லிம்,தமிழ் கிராமங்களில் இடம்பெற்றுவருகின்றன.

கலப்புத் திருமணத்தினால் அதுசார்ந்தகுடும்பங்களிடம் மாத்திரமேசிறியபிரச்சினைகள் ஏற்படுகின்றனவேதவிரகிராமமட்டங்களிலானபிணக்குகள் ஏற்படுவதில்லை. சம்பந்தப்பட்டகுடும்பங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளும் பகமைகளாகத் தொடர்வதில்லை. எனவேகலப்புத் திருமணத்தினால் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் காணப்படும் நல்லுறவில் எவ்விதபதிப்புக்களையும் பெரியளவில் ஏற்படுத்தவில்லை.

எனவே, 2015ம்ஆண்டுதொடக்கம் இன்றுவரைஆய்வுப்பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் அரசியல்,பொருளாதார,சமய,கலாசார,கல்வி,திருமணரீதியிலானஉறவுகளில் (கடந்தகாலங்களைவிட)முன்னேற்றநிலைமைகள்காணப்படுகின்றன.

**முடிவுரை**

முஸ்லிம்களின் மீள்குடியேற்றக் காலப்பகுதியில் (2009 -2015) தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையேநல்லுறவு,நல்லிணக்கம்,இணைந்தசெயற்பாடுஎன்பனகுறைந்தநிலையில் அமைந்திருந்தது. முஸ்லிம்களின்பலவந்த இடப்பெயர்வு,இடப்பெயர்வின்

நினைவுகள்,புதியதலைமுறையினர்,நவீனசாதனங்கள்,இனத்துவப்பாடசாலைகளின் உருவாக்கம் போன்றகாரணிகள் இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்தின. எனினும் காலஓட்டத்தில் சகலவிடயங்களும் மாறும் என்றகூற்றின்படிமீள் குடியேற்றத்திற்குப் பின்னரானகாலப் பகுதியிலிருந்து இன்றுவரைமுசலிப்பிரதேசசெயலகப் பிரிவில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையேஇன நல்லுறவுவமுப் பெற்றுவருவதனைஅவதானிக்கக் கூடியதாகஉள்ளது.இவ்விடயம் பற்றிஎதிர்காலத்தில் ஆய்வைமேற்கொள்வோருக்கு இவ்வாய்வுஉதவவல்லது.

**உசாத்துணைகள்**

[1] Kumar Rupersinghe and gayathiri Fernando. (2007). Nonviolent co-existence moving communities beyond fear suspicion and weapons of war. Sri Lanka: co-existence(fee)

[2] பழீல் எஸ்.எச்.எம்., *(2008). முஸ்லிம் - தமிழ் சகவாழ்வு. இஸ்லாமியசிந்தனை. பேருவளை: ஜாமியாநளிமியா.*

[3] மஸ்தான் எம். எம் *(2015). வடக்கு முஸ்லிம்களின் பலவந்தவெளியேற்றம் 1990. முசலி: முசலி இளைஞர் ஒன்றியம்.*

[4] ரஸாக் அலி *(2005). இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும். ஒலுவில்: அஸ்ரப்ஞாபகார்த்ததகவல் வளநிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

[5] ஹஸன்.ஜே. ஐ., *(2015).முசலிப் பிரதேசத்தில் தமிழ். முஸ்லிம் நல்லுறவு.சிறப்புகலைமானிஆய்வறிக்கை, இஸ்லாமியகற்கைகள் துறை, இலங்கைதென்கிழக்குப் பல்கலைக் கழகம்.*

**நேர்காணல்கள்**

[6] அலிபி. எம்., *(2015). முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையேநல்லுறவு. நேர்காணல்:பி. பிபொற்கேனி. 18.05.2015.*

[7] அலியார்.எம்.எஸ்.எம்., *(2015). முசலிப் பிரதேசத்தில் தமிழ்ரூபவ் முஸ்லிம் இனங்களிடையே நல்லுறவு. நேர்காணல்:வெளிமேலை. 19.05.2015.*

[8] இதயராசாகுரிஸ், *(2023). முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுற. நேர்காணல் 07.06.2023:அரிப்பு.*

[9] சலாகுதீன். எஸ்., *(2015). முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையேநல்லுறவு. நேர்காணல்:மறிச்சிக்கட்டி. முள்ளிக் குளம் இணைந்தபகுதி. 03.06.2015.*

[10] திரிஸா எஸ்., *(2015).முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையேநல்லுறவு. நேர்காணல்:சவேரியார்புரம். 19.05.2015.*

[11] திரிஸா.எஸ்., *(2023). முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுறவுநேர்காணல் 08.06.2023 :சவேரியார்புரம்.*

[12] தேவபாலன்.பி., *(2015).முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையேநல்லுறவு. நேர்காணல்: எஸ். பிபொற்கேனி. 18.05.2015.*

[13] தேவபாலன்.பி., *(2023). முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுறவு. நேர்காணல் 08.06.2023. பொற்கேனி.*

[14] ராஜிதாஎச்., *(2023).முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுறவுநேர்காணல் 05.06.2023. முசலி.*

[15] ரயிசுதீன்.எம்.,*(2015).முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுறவுநேர்காணல் 18.05.2015: சிலாவத்துறை.*

[16] ரஸீத்.பி.,*(2023).முசலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரானதமிழ் - முஸ்லிம் நல்லுறவு"நேர்காணல் 07.06.2023: பண்டாரவெளி.*

*****



© 2024, IRJTSR 